கண. மகேஸ்வரன்



# மலரும் வாழ்வு

தாரகை வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரும் வாழ்வு

(குறுங்காவியம்)

△

கண. மகேஸ்வரன்

▽

தாரகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

தன் இனிய சேவையால்
என் உள்ளங் கவர்ந்த
பிணி தீர்க்கும் பணிமனையாம்
'சீ - லோ - ம்' சுகாதார சேவை நிலையத்திற்கு.

— க. ம.

△


| | | |
|---|---|---|
| நூல் | : | மலரும் வாழ்வு. |
| வகை | : | குறுங்காவியம். |
| ஆசிரியர் | : | கண. மகேஸ்வரன். |
| பதிப்பு: | : | முதலாவது செப்ரம்பர் 1992. |
| உரிமை: | : | திருமதி பிலோமினா மகேஸ்வரன்,<br>21, சுப்பையா லேன், மட்டக்களப்பு. |
| பிரதிகள் | : | 1200. |
| அச்சமைப்பு | : | புனித வளனார் கத்தோலிக்க அச்சகம்,<br>10, அட்வகேட் றோட், மட்டக்களப்பு. |
| அட்டை | : | கே. எஸ். பவான். |
| வெளியீடு | : | 'தாரகை' |
| விலை | : | ரூபா [redacted] 25/- |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

மனித வாழ்வில் நடக்கின்ற நிகழ்வுகள் ஆயிரம், ஆயிரம்!

சாதாரண மனிதர்கள் அவைகளைப் பார்த்து, சில போது பழகி, அனுபவித்துச் சென்றுவிடுகின்றார்கள். ஆனால் கலையுணர்வு மிக்கோர் பார்க்கும் பார்வையோ வேறு. தம்மை ஆழப்பாதித்த உணர்வுகளை, அதன் வழியே எழுந்த சிந்தனைகளை ஒழுங்குபடுத்தி, வடிவங் கொடுத்து அதை சமூகம் அறிந்து பயன்பெற வழங்குகிறார்கள்.

'மலரும் வாழ்வு' எனும் இக்குறுங்காவியத்தில் இதனைக் காணமுடிகின்றது.

சாதாரணமாக எல்லோருக்கும் கிடைக்கின்ற மருத்துவமனை அனுபவம், மருத்துவப் பயனோடு மட்டும் சென்றுவிடாது அதையும் கடந்து மனவிசாலத்தைப் பெருக்கி, நல்ல நினைவுகளை, நன்றி உணர்வுகளை, ஆன்மீகச் சிந்தனைகளைக் கிளறி, அதன் வழியே 'நான் எதையாவது இவர்களுக்குச் செய்தேயாக வேண்டும்' என்ற ஓர் இலட்சியத்தையும் உருவாக்கிவிட்டிருப்பதை உணர முடிகிறது.

காவியத்தைப் படிக்கும்போது கவிதையும் புரிகிறது; கவிஞனின் உள்ளமும் புரிகிறது.

இந்த நல்ல முயற்சியை மனதாரப் பாராட்டுவோம். இதன் ஆசிரியர் திரு. கண. மகேஸ்வரனுக்கு நமது நல்லாசிகளையும் வழங்குகிறோம்.

✠ **பேரருள் திரு. யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை**
மறை ஆயர், திருகோணமலை - மட்டக்களப்பு
மறை மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

எழுத்தாளர் திரு. கண. மகேஸ்வரன் அவர்களை கிழக்கில் வெளிவந்த ''தாரகை'' சஞ்சிகையின் ஆசிரியராக ஏற்கனவே நான் அறிவேன். ஆயினும் இவரை ஒரு கவிஞனாக - நூலாசிரியனாக ''மலரும் வாழ்வு'' என்னும் இக்குறுங்காவியம்மூலம் அறியும்போது பெருமகிழ்வடைகின்றேன்.

ஒரு சாதாரண மனிதன் தனக்கு ஏற்படும் நோயையும் சரி, அது தீர்ந்தபின்னால் வரும் சுகத்தையும் சரி ஒரு சம்பவமாக மறந்து விடுகின்றான். மாறாக ஒரு கவிஞனின் பார்வையில் அதே நிகழ்வு ஒரு காவியமாக விரிந்து, சமூகத்துடன் ஒன்றி கருத்தாழமிக்க ஒரு கலாபூர்வ வெளிப்பாடாக பரிணமிக்கின்றது. தனது அனுபவத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதோடு நின்றுவிடாது, தனது நன்றி அறிதலின் வெளிப்பாடாக தன்னை அன்புடன் கவனித்த வர்களுக்கு எதையாவது செய்தாக வேண்டுமென்ற முனைப்பு ஆசிரியரின் பரந்த உள்ளத்தை வெளிப்படுத்துகின்றது.

மனித நேயமும்; ஆன்மீக ஈடுபாடும், நன்றியுணர்வும் காவியம் முழுவதும் பரந்து காணப்படுவது நூலின் சிறப்பம்சமாகும்.

ஆற்றல்மிக்க இந்தக் கவிஞனின் எழுத்தாற்றல் வளர, சமூகம் பயனுறும்வண்ணம் இன்னும் பல எழுத்தோவியங்களை உருவாக்கி, ஆக்க இலக்கியத்துறைக்குப் பங்களிப்பு செய்ய பொதுமக்களும், இலக்கிய ஆர்வம் கொண்டவர்களும் சகல ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும் என்றும் - அத்துடன் இவருக்கு இறையாசியும், அருளும் கிட்ட வாழ்த்துகின்றேன்.

**யோசப் பரராஜசிங்கம், எம். பி.**
*மட்டக்களப்பு மாவட்டம்.*

'சுபராஜ்',
மட்டக்களப்பு.
29-09-1992.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FOREWORD

It was an apple that fell on an eminent scientist's head that inspired him to visualize the invisible forces of gravitational attraction between material bodies and to enunciate his famous Newton's Law of Gravitation. A short sta; in the Siloam Hospital for the surgical treatment of an irritating chronic ailment has inspired a young Tamil writer and poet to compose poetry recording his painful and pleasant experiences, his appreciation and gratitude for the humanitarian services rendered by the hospital staff, and the spiritual thoughts that emerged through this nerve racking ordeal.

He has pointed out quite correctly that the pain of mind and suffering caused by illness, infirmity or loneliness can be eliminated through diverting one's mind on literary pursuits. Masterpieces of literature have been produced by those in jail or house arrest for prolonged periods. Just three day's stay in hospital has inspired this young author to publish a booklet titled "MALARUM VALVU" *(மலரும் வாழ்வு - குறுங் காவியம்)*.

We congratulate the author and wish him all success in his literary ventures.

**Dr. J. T. Xavier** MBBS, FRCS,
Consultant Surgeon and Member of the Board of Directors of the Siloam Health Services Centre,
Lloyd's Avenue, Batticaloa,
SRI LANKA.

22nd September 1992.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

ஒரு மனிதனுடைய வாழ்க்கை மலருவது எப்போது என்ற வினாவுக்குப் பலரும் பலவிதமாக விடை அளிப்பர்.

சிறந்த கல்வியைப் பெறும்போது, நிறைந்த பொருளைப் பெறும்போது, அருமையான மனைவி, பிள்ளைகளைப் பெறும்போது, நேசம் மிகுந்த நண்பர்களை, அயலவர்களைப் பெறும்போது என்று விடைகள் பல தரப்படலாம். ஆனால் வாழ்வின் மலர்வு புறக்காரணி களைவிட அகக்காரணிகளையே சார்ந்து நிற்கின்றது என அறிஞர் கள் கூறுவர். தன்னை உணர்ந்து, தன்னில் விடுபடும்பொழுதே மனி தன் வாழத் தொடங்குகின்றான்; வாழ்வெனும் மொட்டு அவிழத் தொடங்குகின்றது. இது உளவியலாளர்களுக்கும் உடன்பாடானதே

'மலரும் வாழ்வு' எனும் இக்குறுங்காவியத்தில் ஆரம்பம் முதல் இறுதி வரை அடிநாதமாய் ஒலிப்பது ஒரு புதிய மனிதனின், புதிய வாழ்வின், புதிய இலட்சியத்தின் தோற்றம் என்றே கூறலாம்.

விலங்கு மனிதனாய் இருந்த வேளையில்
விலங்குக் குணங்கள் என்னுளு மிருந்தன
விலங்கு ஒடிந்து விடுதலை யானதும்
விடிவு எனக்குள் பிறப்பதை உணர்ந்தேன்

என்னும் கவிதை வரிகள் மேற்கூறிய கருத்துக்குச் சான்றாகும்.

நோய் என்பது மனித வாழ்வுக்கு எப்போதுமே ஒரு சவால். எல்லோருக்குந்தான் நோய் வருகிறது. அந்நோயால் பலருக்குச் சாவு வருகிறது; சிலருக்குத்தான் வாழ்வு வருகிறது. புத்தபெருமான் ஞானத்தைத் தேட நோயும் ஒரு காரணம். 'இனிக்கோ' புனித இஞ்ஞாசியாராக மாற நோய் - மருத்துவமனை அனுபவமும் ஒரு காரணம். 'மலரும் வாழ்வு' காவியம் பிறக்கவும் ஒரு நோய் - மருத் துவமனை காரணமாக இருப்பது குறிப்பிடத்தக்கது. உடலை வருத் தும் நோய் உள்ளத்தை வருத்தும் நோயாக - அல்ல, திருத்தும் நோயாகக் காண்பது ஆசிரியரின் ஆழ்ந்த ஆன்மீக அனுபவமாகவே படுகிறது.

தேவன் திருவுளம் என்னுள் நிறைந்ததோ?
தேர்வினில் நானும் தேர்ச்சி யுற்றேனோ?
பாவி மனிதனைக் கொன்றொழித் தேனோ?
பாவ உணர்வினில் பற்றுதல் கொண்டேனோ?

என்னும் வரிகள் இறைவனுக்குள் ஓர் ஆன்மா அனுபவிக்கும் அங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாய்ப்புகளே. இந்த அங்கலாய்ப்புகள் மேலும் ஆழ்ந்து சென்று இறைவனின் அதிசயங்களைக் கண்டுகொள்வது ஒரு படிமுறை வளர்ச்சியைக் காட்டுகிறது.

..........................................................................

ஒன்றினி லொன்று தங்கி யிருக்கவே
ஒவ்வொன் றினையும் முதல்வன் படைத்தான்.

நோயைத் தந்தேன் நொடித்திட வைக்கிறான்
நோயும் இல்லையேல் நொடிப் பொழுதேனும்
தேவனை மறந்தே திரிவான் என்பதை
நோயுற்ற மனிதன் உணர்ந்திடத் தானோ?

இயேசுவின்பால் ஆழ்ந்த பற்றும், ஈடுபாடும் கொண்டுள்ள ஆசிரியர் இயேசுவின் போதனைகளையும், அவை தம் மனதில் ஏற்படுத்திய பாதிப்பையும் நூலெங்கும் பரக்க வெளிப்படுத்தியுள்ளார்.

மறை வல்லுனரான நிக்கோதேமுவிடம் இயேசு கூறிய மறு பிறப்புத் தத்துவம் :

.............................. ... ... ....................

மறுபிறப் பென்பது மரணம் நேர்ந்துதான்
வந்திட வேண்டும் என்பது விதியா?

மரணம் வருமுன் மனமது மாறின்
மறுபடி பிறப்பு வந்திடு மறிவீர்

................ .. ... ................. ..............

என்னும் வரிகளில் மிக நெருங்கி நிற்பதைக் கண்டுகொள்ள முடிகிறது.

[illegible]வேத நூல் கூறும் புகழ்பெற்ற 'சீலோம்' குளம் மருத்துவ மனைக்கும், மனமாற்றத்துக்கும் குறியீடாகப் பயன்படுத்தியிருப்பது ரசிக்கத்தக்கது.

'சீலோம்' குளத்தில் மூழ்கி வந்ததால்
சீரும் சிறப்புமென் வாழ்வில் மலர்ந்தது.

.............. .... ................................ ............

இவ்வாறு உள்ளம் அடைந்த புது மாற்றம் மன்னுயிருக்காகத் தன்னுயிரைப் பகிர்ந்தளித்த இயேசு மகான் பாதையில் இறைவன் அளித்த ஆற்றல்களை மற்றவருக்காகப் பகிர்ந்தளிக்க, பயன்படுத்த முனையும் புதிய இலட்சியத்தில் நிறைவு பெறுகிறது.

காவியத்தில் காண்பது ஒரு தனி மனிதனது சிறிய அனுபவமாக இருப்பினும் ஆழ்ந்து படித்து அனுபவிப்போருக்குப் பெருமரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றைப் புதைத்திருக்கும் சிறு விதைபோல் வாழ்விற்கு உறுபொருள் தரும் அரிய கருத்துக்களைக் காவியம் கொண்டிருப்பது தெரியவரும்.

ஆசிரியர் கூறுவதுபோல் கவிதைகள் பல இடங்களில் இலக்கண வரம்பை மீறி ஓடினாலும், ஓசையுடன், எளிமையுடன் நீரோட்டமாகச் செல்வது அனைவரும் விரும்பி வாசிக்கும் தன்மையைத் தந்துளது.

நன்னோக்குகள் நனவாகுக! என்று வாழ்த்துவோம்.

மலர்வேந்தன்
இணையாசிரியர், 'தொண்டன்',
உதவிப் பணிப்பாளர், சமூகத் தொடர்பு நிலையம்.

326/21, திருகோணமலை வீதி,
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

நண்பர் கண. மகேஸ்வரன் எழுத்தாளர்; கவிஞர்; கட்டுரை யாளர்; சஞ்சிகை ஆசிரியர். தமது சிறுகதைத் தொகுதியொன்றினைத் தருவார் என்று ஆவலோடு எதிர்பார்த்திருக்கும் வேளையில் அவருட் பட எவரும் எதிர்பாராதவாறு இக் கவிதைப் படைப்பினை தந்தி ருக்கிறார். எனது பால்யகால நண்பரும் ஒருரவருமான கண. மகேஸ் வரனது நூலுக்கு முன்னுரை வழங்குவது ஒரு விதத்தில் பேருவகை தருவதாகவும் இன்னொரு விதத்தில் சங்கடம் ஏற்படுத்துவதாகவும் இருப்பதை உணர்கின்றேன்.

மட்டக்களப்பிலுள்ள தனியார் மருத்துவ மனையான சீ-லோ மில் இரு மாதங்களுக்கு முன்னர் நண்பர் சத்திர சிகிச்சையொன் றிற்குட்பட நேர்ந்தது. அவ்வேளையில் பெற்ற அனுபவங்களும் நன் றிப் பெருக்குமே இக்குறுங்காவியத்தை இயற்றச்செய்தன. இவ்வாறு மருத்துவமனை அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு தமிழ்ப் படைப்புக்கள் எவையேனும் வெளிவந்துள்ளனவா? அவற்றிலிருந்து இப்படைப்பு எவ்விதங்களில் வேறுபட்டுள்ளது? கவிஞர் தமது முயற்சி யில் எவ்வளவு தூரம் வெற்றிபெற்றுள்ளார்? இவை எம்முன் நிற்கும் சில வினாக்கள்.

மேற்கூறியவாறான படைப்புக்களுள் சிலவே இந்நிமிடமளவில் நினைவுக்கு வருகின்றன. மயிலிட்டி வைத்தியசாலை அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு அங்கதச் சுவைபொருந்த 'கவீ' பல வரு டங்களுக்கு முன்னர் கவிதையொன்று இயற்றியிருந்தார். வைத்திய சாலை நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு நந்தி, அ. முத்து லிங்கம், ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் முதலானோர் சில சிறுகதை கள் எழுதியுள்ளனர். ''தெணியான்'' எழுதிய 'கழுகுகள்' என்ற நாவல் வைத்தியசாலையில் நிகழும் ஊழல்களை அம்பலப்படுத்து கிறது. தமிழ்நாட்டின் குறிப்பிடத்தக்க எழுத்தாளருள் ஒருவரான விட்டல்ராவ் ஆஸ்பத்திரி மணம் வீசும் வண்ணம் 'மற்றவர்கள்' என் றொரு சிறந்த நாவலைப் படைத்திருக்கின்றார். இக்குறுங்காவியம் மேற்கூறிய படைப்புகளிலிருந்து விலகி நிற்கின்றது. அது எவ்வாறு?

(நோய் தந்த) வேதனையும் ('சத்திர சிகிச்சை' என்றதும் உடன் தோன்றும்) பயமும் பதற்றமும் தனிமையும் (அன்பான உறவுகள், உபசரிப்புக்கள் என்பன பற்றிய) எதிர்பார்ப்பும் இறைவிசுவாசமும் ஆழ்ந்த யோசனையும் தத்துவத் தேடலும், நகையுணர்வும் மனித நேயமும் எதிர்கால நம்பிக்கையும் மிக்க ஆத்மா ஒன்றிலிருந்து தங்கு தடையின்றிப் பிரவாகித்துப் பாய்ந்த வெள்ளமே இக்குறுங்காவிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகின்றது. இறை விசுவாசம், வாழ்க்கை பற்றிய சில சிந்தனைகள், மனித நேயம், தன்னம்பிக்கை, நன்றியுணர்வு என்பனவற்றை இது வெளிப்படுத்த முற்படுகின்றது. இவ்விதங்களில் இப்படைப்பு மேற் கூறிய படைப்புகளிலிருந்து வித்தியாசப்பட்டு நிற்கின்றது.

கண. மகேஸ்வரன் இளங்கவிஞர். ஆயினும், வாழ்க்கை பற்றிய தம் நோக்கிற்கேற்புடையதான தத்துவக் கருத்துக்களை ஆங்காங்கு வெளிப்படுத்தும் போதெல்லாம் தமது 'முதிர்ச்சி' நிலையினை உணர்த்திவிடுகின்றார். எடுத்துக்காட்டாக,

"நோய் வரும் போதிலும் வேதனை
நோய் தீரும் போதிலும் வேதனை
பாவம் சேர்கையில் பாதி வேதனை
பாவம் அழிகையில் மீதி வேதனை"

என்றவாறு பாடுமிடங்களில் கவிஞர் கண்ணதாசனை நினைவுபடுத்துகின்றார். இம் 'முதிர்ச்சி'

"அறுவையி னூடே அகந்தையைக் கண்டேன்
அறுந்தன அவையென அகத்தினுள் மகிழ்ந்தேன்"

என்று பாடுகின்ற வேளைகளில் இன்னொரு நிலையினை எட்டி விடுகின்றது. ஆன்மீக நாட்டம் மிகுந்த வாசகர் இவ்விதத்திலே இப்படைப்பினை நன்கு வரவேற்கவே செய்வர். வாசித்து முடித்த பின்னர் அத்தகையோர் சிலருக்கு 'இரட்சணிய யாத்திரிக'மும் கவிஞர் கிருஸ்ணபிள்ளையும் நினைவுக்கு வரக்கூடும். (அதே வேளையில் தற்கால ஏனைய வாசகர் சலிப்படையவும் நேரலாம்). இப்பின்னணியில் நோக்கும்போது எதிர்காலத்தின் சிறந்ததொரு தத்துவக் கவிஞன் நண்பருள்ளத்தில் குடியிருக்கிறான் என்பேன்.

வெகு இயல்பான முறையில் வெளிப்படும் கவிதா ஆற்றலும், தங்கு தடையற்ற அதன் ஓட்டமும் இக் குறுங்காவியத்தில் காணப்படும் சிறப்பியல்புகளுள் சிலவாகும். இவ்விதத்தில்,

"எழுத்து எனக்கும் இயல்பாய் வருமே" என்றும்
"கைகட்டிச் சேவகம் செய்தது பேனை" என்றும் கவிஞர் கூறுவது பொருத்தமானதே. மேலும்,

"எதுகை மோனைகள் எதுவும் இன்றியே
கவிதை பிறந்திடல் கூடும் என்பதோ?
மரபை மீறியும் கவிதை பிறக்குமோ?
கவிதை பிறந்தது..."

என்கிறார் கவிஞர். உண்மைதான். இங்கு கையாளப்பட்ட கவிதை வடிவம் மரபுக் கவிதையுமன்று; புதுக்கவிதையுமன்று. 'புதிய கவிதை' வடிவமெனலாம். ஏலவே, புதுமைப்பித்தன் இத்தகைய கவிதை முறையினை பரிசோதனை செய்து பார்த்திருந்தார். அவரது தாசனான 'திருச்சிற்றம்பலக் கவிராயர்' (சிதம்பர ரகுநாதன்) அம்முயற்சியைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்திருந்தார். ஆயினும், பின்னர் வேறெவரும் அதனை வளர்த்தெடுக்கவில்லை. அது எவ்வாறாயினும், இக் குறுங்காவியத்தின் தங்கு தடையற்ற ஓட்டத்திற்கு இத்தகைய கவிதை வடிவமும் காரணமாயமைகின்றதெனலாம்.

இக்கவிஞரின் ஆரோக்கியமான எதிர்கால வளர்ச்சி கருதி சில குறைபாடுகளையும் சுட்டிக் காட்டுவது அவசியமாகிறது. ஆங்காங்கே ஓசை வேறுபடுமிடங்கள் உள்ளன. அத்தகு இடங்களை நுணுக்கமாக அவதானித்து (ஏனைய இடங்களில் சுட்டிக்காட்டியிருப்பது போல்) சுட்டிக்காட்டியிருக்க வேண்டும். அவ்வாறே ஒருசில இடங்களில் ஓசை முறிவுகளுமுள்ளன. அவற்றையும் நன்கு கவனித்து விலக்கியிருக்க வேண்டும்.

முக்கியமான இன்னுமொன்று: இப்படைப்பிலுள்ள கவிதைகளில் எளிமையுண்டு; தெளிவுண்டு; ஓசைநயமுண்டு; தடையற்ற ஓட்டமுண்டு. அதே வேளையில் இன்னுமொரு குறையுமுண்டு. ஒரு நோயாளி வைத்தியனிடம் யாவற்றையும் மறைக்காமல் கூறிவிடுவது நல்லதல்லவா? என் நிலையும் ஒருவிதத்தில் அவ்வாறுதான். அக் குறைபாடு யாது?

கவிஞனது உணர்ச்சியின் வெளிப்பாடாக அமையும் கவிதையானது அவ்வுணர்ச்சியினை வாசகனிடத்திலும் தோற்றச் செய்ய வேண்டுமல்லவா? அது ஏற்புடையதாயின், இக்குறுங்காவியம் அவ் விதத்தில் இன்னமும் 'பூரண சுகம்' பெறவேண்டிய நிலையிலுள்ளது என்றே கூறத்தோன்றுகின்றது.

இறுதியாக ஒன்று. மனிதர்கள் மட்டுமன்றி நன்றியுணர்வும், பொதுநல நோக்கும் கூட 'காணாமற் போகும்' இன்றைய உலகில் வாழ்கின்ற நண்பர் கண. மகேஸ்வரனது உயர்ந்த உள்ளமும், உன்னத இலட்சியமும் நிச்சயம் பாராட்டப்பட வேடிண்யவையன்றோ!

கவிஞரது முயற்சி வெற்றிபெறுவதற்கு வாசகரது பூரண ஒத்துழைப்புக் கிட்டுமாக!


செ. யோகராசா எம். ஏ.
(விரிவுரையாளர், தமிழ்த்துறை)

கிழக்குப் பல்கலைக்கழகம்,
மட்டக்களப்பு.
1992-09-22.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

உள்ளத்து உணர்ச்சிகளின் உன்னத வெளிப்பாடே கவிதை! அது, தூரிகை தீட்டாத அழகான ஓவியம்.

கவிதை படைப்பது எல்லோர்க்கும் எளிதில் கைவராதபோதும், கவிதையை ரசிக்கத்தெரியாத மானிடனில்லை.

வாய்வழிப் பிறந்து, செவிவழி இசைத்து, பதிவின்றியே காணாமல் போயொழிந்த நயமிக்க நாட்டுப்புறத்துக் 'கிராமியக் கவியமுதங்கள்' தான் எத்தனை யெத்தனை? நாட்டுப் பாடல்கள் எல்லாம் பாமர மக்களின் அழகிய கவிதை வெளிப்பாடன்றோ?

எனவேதான், என் மனதைத் தைத்துப் பட்டழுத்திய நிகழ்வுகளை சிறு காவிய வடிவில் தரமுனைந்தேன். இதில் எந்தளவுக்கு வெற்றி பெற்றுள்ளேன் என்பதை சுவைஞர்களாகிய நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும். உங்கள் உற்சாகப்படுத்தலின் அளவே எனது ஏற்றத்தின் படிக்கல்.

ஒவ்வொரு மனிதனும் இயல்பில் நல்லவனாகவே இருக்கின்றான். எனினும், புறச்சூழ்நிலைகள் சிலவேளைகளில் அவனுக்குள் இருக்கும் தனித்தன்மையான 'அவனை' மறைத்து, வெளியே 'ஏதோ' போல், 'ஏனோதானோ' என்ற மனப்பாங்கில் பின் தள்ளிவிடுகின்றன.

வாழ்க்கையில் ஒரு பற்றுதலின்றி எந்த மனிதனாலும் வாழ முடியாது. நாம் ஒவ்வொருவருமே ஒவ்வொருவருக்கும் வழிகாட்டிகளே!

அந்த வகையில், என் வாழ்க்கைத்தடத்தின் பரிணாமவளர்ச்சியில் அக்கறைகொண்ட ஒவ்வொரு மனிதருக்கும் நான் நன்றிக்கடன் செலுத்தவேண்டியவனாகின்றேன்.

இந்தவிதமாக என்னைச் சிந்திக்கவைத்த சூழலின் பின்னணியை இங்கு தெரிவித்தேயாக வேண்டும்.

சிலோமில் நான் கழித்த அந்த மூன்று இரவுகள் இந்த வகையில் மிக முக்கியமானவை. அங்கு கிடைத்த அமைதியும், தனிமையும், ஊழியம் புரிந்தோரின் அன்புச் சேவையும், கனிவான உள்ளம் கொண்ட 'காக்கும் கரங்க'ளின் அளப்பரிய கண்காணிப்பும் மானிடத்தின்பால் ஏற்கனவே நான் கொண்டுள்ள நேயத்தை மேலும் பன்மடங்காக்கி, என்னுள் இருந்து என்னையே அறியாமல் வியாபகம் கொண்டிருந்த 'நான்' என்ற மனப்பாங்கு விலக, என்னை நானே ஒரு 'மூளைச் சலவை'க்கு உள்ளாக்க நேர்ந்தது.

எனது பலம், பலவீனம் என்பவற்றை இனங்கண்டு என்னை நானே புடமிட்டுக்கொள்ள வழிவகுத்தது. இன்னமும் சமூகத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவோ சேவை செய்தாகவேண்டும் என்றவோர் புத்துணர்வை என்னுள் வளர்க்க அது காலாயிற்று.

நீண்ட நாட்களாக வாழ்க்கையை நான் பார்த்த கோணத்திலிருந்து விலகி, புதிய ஒரு கோணத்தில் தரிசிக்கவேண்டிய நிர்ப்பந்தம் என்னை அழுத்தியது.

என்னைச் சிந்திக்கவைத்த அந்த மூன்று இரவுகளை என்னால் எப்படி மறக்கமுடியும்?

நோயாளியாய் என்னை மறந்து துயில்கொள்ளவேண்டிய நான், மேற்போந்த சிந்தனைகளால் நித்திரையின்றி அவதிப்பட்ட அந்த நெருக்கடி நிலையை வர்ணிக்க என்னிடம் வார்த்தைகள் இல்லை.

இந்தக் குறுங்காவியத்தின்மூலம் நான் சமூகத்திற்குச் சொல்ல வந்த விசயம் இரண்டு. அவை மிகமிகச் சாதாரணமானவையே. ஆனால் மிக முக்கியமானவை. 'எந்த ஒரு சிறு நோயைத்தானும் பராமுகமாக விட்டுவிடாமல் உரிய காலத்தில் களைய வழிபார்க்க வேண்டும்' என்பது ஒன்று. 'நம்மைப்பற்றி நாமே சிந்திப்பதன்மூலம் நல்ல அறுவடையைப் பெற்றுக்கொள்ளலாம்' என்பது மற்றொன்று.

இந்தக் காவிய வெளிப்பாட்டின் பிரதான நோக்கத்தையும் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

எத்தனையோ ஆசைக் கனவுகளை மனதினுள் வளர்த்துக் கொண்டு முகந்தெரியாத மனிதர்களின் ரணங்களையெல்லாம் பார்த்து, சகித்து பொறுமையோடு சேவையாற்றும் மானிட நேயமிக்க ஆத்மாக்களுக்கு என்னால் ஒரு சிறு துளி நன்றிக்கடனையாவது எப்படித் தெரிவிப்பது என்று என்னுள் எழுந்த தாக்கத்தின் வெளிப்பாடே இது.

'பகிர்ந்துகொள்ளல்' என்பதுதான் எத்தனை பெரிய அற்புதம்!

எனவேதான், உங்கள் உள்ளத்து உணர்வுகளையும் என்னுடன் பகிர்ந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

இந்த இடத்தில், என்னை நேசித்தவர்களை – என்பால் அன்பு சொரிந்தவர்களை – என்னோடும் என் குடும்பத்தினருடனும் பழகி எம்மைப் புரிந்துகொண்ட அன்பு நெஞ்சங்களை நன்றியுடன் நினைவு கூர்வதும் எனக்கு அவசியமாகப்படுகின்றது.

எனக்குத் தமிழின்பால் மிகுந்த பற்றுதலைத் தோற்றுவித்த என் ஆசான் 'மன்னவன்' மு. கந்தப்பு அவர்கள், பண்டிதர் எம். பரந்தாமன் அவர்கள், எழுத்துலக நண்பர்கள், குடும்ப நண்பர்கள், பத்திரிகை சிறு சஞ்சிகைகளின் ஆசிரியர்கள், குறிப்பாக 'ஈழநாடு' பத்திரிகைமூலம் எழுத்துலகில் என்னை ஊக்குவித்த ஒவ்வொரு காலகட்ட வாரமலர் ஆசிரியர்கள் திரு. ஈ. கே. ராஜகோபால் (பாமா ராஜகோபால் – தற்போது லண்டன் "பாரிஸ் முரசு" ஆசிரியர்),



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. எஸ். பெருமாள், குணம் அக்கா, சிந்திக்கக் கற்றுத்தந்த 'சிரித்திரன்' நகைச்சுவை ஏட்டின் ஆசிரியர், ஓவியர் திரு. எஸ். சிவஞானசுந்தரம், என்னை இந்த நிலைக்கு உயர்த்திய என் சிற்றப்பா திரு. செ. சிவஞானசுந்தரம் B. A., குறிப்பாக 'ஒரு குடும்ப'மாக இயங்கும் என் அலுவலக நண்பர்கள், சகோதரிகள், என் பெற்றார், சகோதரர், உறவினர், இந்தக் காவியத்தினூடே நான் குறிப்பிடும் அன்பு நெஞ்சங்களையெல்லாம் நன்றியுடன் நினைவுகூர வேண்டியவனாய் உள்ளேன்.

ஈற்றில், இந்நூலிற்கு ஆசியுரை வழங்கிய திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் கலாநிதி அதிவந். பேரருட் திரு. யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களுக்கும், அன்புடன் உவந்து வாழ்த்துரை வழங்கிய மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ யோசப் பரராஜசிங்கம் அவர்களுக்கும், அணிந்துரை நல்கிய திரு. எஸ். எஸ். ஜேசுதாஸ் (மலர்வேந்தன்) அவர்களுக்கும், முன்னுரை வழங்கிய என் பால்ய நண்பரும் அறிவு ஜீவியுமாகிய திரு. செ. யோகராசா அவர்களுக்கும், மதிப்புரை வழங்கிய என் பிணி களைந்த நல் மருத்துவ சத்திர சிகிச்சை நிபுணர் திரு. ஜே. ரி. ஸேவியர் அவர்களுக்கும், சீலோம் நிறுவன இயக்குனர்கள், ஊழியர்கள் அனைவர்க்கும், இந்த நூலை மனமுவந்து உடன் அச்சேற்ற உதவிய எனது பெருமதிற்பிற்கும் உறவுக்குமுரிய அருட் சகோ. எஸ். ஏ. ஞானப்பிரகாசம் அவர்களுக்கும், புனித வளனார் கத்தோலிக்க அச்சக ஊழியர்களுக்கும், அட்டைப்படத்தை அழகுற அமைத்துத்தந்த நண்பர் கே. சரவணபவான் (பவன்) அவர்களுக்கும், மற்றும் இதுவிடயத்தில் ஒத்தாசை புரிந்த நண்பர்கள், துணைவி, பிள்ளைகளுக்கும் கூட நன்றி தெரிவிக்க வேண்டியவனாகின்றேன்.

கலைஞர்களான என் பெருமதிப்பிற்குரிய உங்கள் அனைவர்க்கும் நன்றிகூறி விடைபெறுகின்றேன்.

வணக்கம்!

அன்புடன்,
கண. மகேஸ்வரன்.

*21, சுப்பையா லேன்,*
*மட்டக்களப்பு.*
*28-08-1992.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரும் வாழ்வு

## - குறுங்காவியம் -

### இறை வாழ்த்து

என்ன சொல்வேன் என்றிருந்த என்னை
தன்னை நினைந்து தன்றாள் பணிந்தால்
என்ன குறையுனக் கென்ற பரமனின்,
சென்னி தாழ்த்தி வணங்கு கின்றேனே!

### 1 மூன்றுநாள் விதிமுறை

விருந்தும் மருந்தும் மூன்றுநா ளென்பர்!
மூன்றுநா ளின்மேல் விருந்தினர் தங்கின்
இல்லக் கிழத்தியர் முணுமுணுத் திடுவர்
மூன்றுநாள் மருந்தில் குணம்வரா தொழியின்

முற்றிப் பழுத்த நோயாய்க் கொள்க!
முற்றிப் பழுத்ததை மூர்க்கமா யேனும்
வெட்டிக் கிழித்தே முறித்திட வேண்டும்!
வேதனை தீர்ந்திட வழியது வாமே!

மூன்றுநாள் விதியென்ப தோர்எழுதாக் கட்டளை!
மூன்றுநாள் விதியொன் றலுவலர்க்கு முண்டே!
மூன்றுநாளி லொருவேலை முடியா தொழிந்தால்
மேலதிகாரியின் கட்டளை வேண்டியே கருமமாற்றுக!

மூன்றுநாள் விதிகள் எனக்கும் பொருந்தின!
மூன்றுநாட்கள் மூன்று நிபுணரை அணுகநேர்ந்தது;
மூன்றுபேருமே முற்றிய நோய்க்கு அறுவையேயென்றனர்!
மூன்றுநாள் விதியின் மகத்துவம் என்னே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுவை யென்றதும் வயிறு கலங்கிற்று;
அறுவை யொன்று செய்தவ னாச்சே!
அறுவை யின்போது அறிவு மயங்கிய
அவதியில் உள்ளம் அணுக மறுத்தது!

மூன்று நிபுணரை நாடிய நோக்கம்
முன்னால் சொன்ன மூன்றினி லுண்டே!
மூன்றாம் நிபுணரின் மூளைச் சலவைக்கும்
மூன்றே நாட்கள் அலைந்தே திரிந்தேன்!

மூன்றாம் நிபுணரை அணுகு முன்னே
* 'ஜேர்மன்' முறையிலும் மாற்றிட முனைந்தேன்!
மாற்றிட முயன்றும் தோற்றுப் போனேன்!
முற்றிப் பழுத்த நோயிது வென்றும்,

'வருடக் கணக்கில் இழுபட நேரும்
வருந்தும் உமக்கும் கஸ்டம் தானே
எனினும் நாங்கள் முயன்று பார்ப்போம்'
என்றவர் உரைத்தார்; நானும் பணிந்தேன்!

மூன்று மாதங்கள் தொடர்ந்து செய்வோம்
முழுதாய் மாற்றிட முடியா விடினும்
முட்டுத் தணியும்; மாற்றம் தெரியும்!
மீண்டும் வருகையில் மூன்று மாதம்

மருந்து செய்யலாம்; அறுவையா லிதுமாறா(து)
என்றவர் சொன்னதை ஏற்றது என்மனம்!
அறுவை செய்தினி அவதிப் படுதலின்
அதுநன் றென்றே அப்போ துணர்ந்தேன்!

* ஜேர்மன் முறை — ஹோமியோபதி வைத்திய சிகிச்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போ ததனை ஏற்றிட்ட போதும்
என்னுள் எதுவோ உறுத்திட லானது!
அன்னார் மீதிருந்த நம்பிக்கை தளர்ந்தது
அடுத்தது பற்றிச் சிந்திக்க லானேன்!

மூளைச் சலவைகள் பலவிதம் போலும்,
மூளையி லொன்றும் ஏறிட வில்லை!
மூன்றுநாள் மருந்துடன் மீண்டுநான் வந்தேன்,
மூளையில் எதுவோ முகிழ்க்கத் தொடங்கிற்று!

மீண்டுநான் வந்து மூளையைக் குழப்பி,
என்குரு நாதர்; எனைமீட்க வந்த
• ஞானப் பிரகாச அடிகள்பால் சென்று
எந்தன் உள்ளக் கிடக்கையை உரைத்தேன்!

'ஹோமியோ பதி'யினிச் சரிவரா தென்றேன்;
'ஒப்பறேசன்' செய்வதே இனிவழி என்றவென்
வார்த்தையை ஏற்றோர் மார்க்கம் சொன்னார்!
'சீ-லோ-ம்' தன்னைச் சிபார்சு செய்தார்!

– வேறு –

பார்வை யிழந்த குருடனைப் பார்த்து
பரமன் யேசு பகர்ந்தா ரன்று;
'சீலோம் குளத்தில் குளித்துவா' என்று!
பார்வை பெற்றவன் பகன்றனன் சாட்சி!

★

---

• சங். சகோதரர் S. A. ஞானப்பிரகாசம் (S. S. J.)
(முகாமையாளர் - புனித வளனார் கத்தோலிக்க அச்சகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. 'சீ-லோ-ம்' புகுதல்

'பிறதரின் மருமகன்' என்றவோ ருறவுடன்
பிணிகள் களைந்திடும் [1] 'சீ-லோ-ம்' மனைக்கு
[2] 'ஜீவ ரத்தினம்' என்பாரைக் காண
[3] 'ஜீவா' வுடனே பயணம் தொடர்ந்தேன்!

முறுவல் பூத்த முகத்துடன் அந்தப்
பெரியவர் வந்தெனை அழைத்துச் சென்று,
[4] ஸேவியர் வடிவிலோர் தெய்வத்தைக் காட்டி
காட்டுக! என்றார்; காட்டினேன் யானும்!

வேறோர் நாளினில் வருவதாய்ச் சொல்லி
வேதனை யோடுநான் விடைபெற்று வந்தேன்;
விடிவினை நோக்கி இனியொரு பயணம்
தொடர்ந்திடு மென்பதை அப்போ தறிந்திலேன்!

மூன்று நாள் முன்னர்தான் என்னை
முழுமையும் கவர்ந்த [5] மலர்வேந் தன்பால்
சீலோமில் சிகிச்சை செய்திடப் போவதாய் (ச்)
செப்பி நின்றேன்; சிரித்தவர் வாழ்த்தினார்!

'நல்லது, செய்யுங்கள்; நலம்வரும்' என்றந்த
நல்லவர் வாழ்த்தி, நல்லாசியு (ம்) நல்கினார்!
நண்பர் களிடத்தும் நான்விடை பெறுகையில்
உள்பய மொன்று உருக்கவே செய்தது!

---

1 SI-LO'-AM HEALTH SERVICE CENTRE.
2 திரு. S. A. ஜீவரத்தினம் (நிர்வாக உத்தியோகத்தர், 'சீலோம்')
3 திரு. ரி. அலோசியஸ் ஜீவா (கத்தோலிக்க அச்சக ஊழியர்)
4 Dr J. T. XAVIER, M.B.B.S. (Cey.), F.R.C.S. (Eng.)
(Consultant Surgeon - SI-LO'-AM)
5 மலர்வேந்தன் (S. S. ஜேசுதாஸ் – இணையாசிரியர், 'தொண்டன்')



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் நாளிலோர் முடிவுடன் நின்றேன்;
முற்றிய நோயை முழுவதும் களைந்து
முழுமை மனிதனாய் மாறிட வெண்ணி
மூன்றே நாட்கள் 'சீலோ'மில் கழித்தேன்!

கழித்தேன் என்பதா? களித்தேன் என்பதா?
கழிக்கவே போனேன்; களிப்புடன் வந்தேன்!
கழிவுகள் கழியின் களிப்பே வருமெனும்
விழிப்பை உணர்ந்தேன்; விடிவு பெற்றேன்!

## 3. என்னே அற்புதம்!

என்னே, அதிசயம்! என்னே, ஆனந்தம்!!
அந்த அற்புதமங்கு நிகழ்ந்த தெங்ஙனம்?
என்னை ஆங்கோர் ஆதர்ச சக்தி
இழுத்து அணைத்து இறுக்கிக் கொண்டது!

பூர்வ ஜென்ம புண்ய பலனோ?
பூரித்துப் போனேன்; போன அன்றே
புனர் ஜென்மம் பெற்றேன்; புளகித்தேன்!
புதுவாழ்வு தன்னில் புகுந்திட்ட தாயோர்

புத்துணர் வென்னைப் புடம்போட் டெடுத்தது!
புதுயுகம் படைத்திட(ப்) புத்துணர் வளித்தது!
வேதனை யெங்கோ விடைபெற்றுச் சென்றது;
சாதனை செய்திடவென் சித்தம் விளைந்தது!

சோதரிய ராயிரம் சேவை புரிந்தனர்;
சோதரர் தானும் சளைத்தா ரில்லை!
முதியோர் ஒருவரைத் தூக்கி வளர்த்திட
முதுகையும் நானங்கு வளைத்திட லானேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— வேறு —

சேவை மனப் பான்மை எவர்க்கும்
கூடி வருவ தில்லை இங்கு
சேவை செயும் யாரும் அதற்கு
நாணி முகம் கோணினா ரில்லை!

— வேறு —

ஏக்கம் கொண்ட எந்தன் நெஞ்சின்
தாக்கம் அன்றே தீர்ந்திடக் கண்டேன்!
இழந்த என் அன்னையை இழந்த சோதரனை
இல்லையே என்று நான் ஏங்கிய சோதரியை

சீலோமில் கண்டேன்; சித்தம் மகிழ்ந்தேன்!
ஏனென்று நானோ ஏதும் அறிகிலேன்!
இறைவன் சாயலில் அனைவரும் தெரிந்தனர்;
என்னே அற்புதம்! என்னே அற்புதம்!

அன்றே யென்சிந்தனை அகல விரிந்தது;
அந்தப் பணிமனைக்கென் நன்றிக் கடனை
எப்படி முடிப்பேன் என்று கலங்கினேன்!
ஏனோ என்னை அச்சம் பிடித்தது!

## 4. சிகிச்சை தொடங்கிற்று

[1] எட்டின் பின்னே எதுவும் உண்டிலேன்!
[2] பத்து மட்டில் 'எனிமா' வைத்தனர்;
என்னுள் எதுவோ புகுந்தது போலும்!
எடுத்தனர் குழாயை; சிறிது போழ்தில்

என்சித்தம் கலங்கிட சீறி யடித்தது,
குடலினுள் ளிருந்த கழிவுகள் யாவும்!
குடலின் கழிவுகள் மட்டுமா கழிந்தன?
மனதின் அழுக்கும் சேர்ந்தே கழிந்தது!

---

[1] எட்டின் பின்னே – இரவு எட்டுமணிக்குப் பின்
[2] பத்து மட்டில் – இரவு பத்து மணியளவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய மனிதனாய் மாறிய நினைவினில்
புளகிதங் கொண்டேன்; புத்துயிர் பெற்றேன்!
துயிலது கலைந்தேன்; துயரும் களைந்தேன்;
தூய மனிதனாய் மாறிடல் கண்டேன்!

மறுநாள் இன்னோர் புதுமை நடந்தது;
'சேலைன்' உடலினுள் பாய்ச்சப் பட்டது!
பாய்ச்சியது சேலைனா, புதிய ரத்தமா?
ஆத்மாவுக்கு(ள்) ளோரராவி புகுந்து ராகமிசைத்தது!

'உன்னை நீயே வருத்திக் கொள்ளு...
உன்னை நீயே வருத்திக் கொள்ளு..
உன்னதம் பிறக்கும் உனக்குள் தானே!'
என்றந்த ஆவி எனக்குச் சொன்னது!

'உண்மை உண்மை! அதைநான் தொடர்வேன்'
என்றே நானும் உத்தாரம் அளித்தேன்!
இன்னோர் மருந்து என்னுள் புகுந்தது;
இடுப்பின் கீழே அனைத்தும் விறைத்தது!

இடுப்பு மட்டுமா விறைத்துப் போனது?
மனமும் சேர்ந்தே விறைத்திட லானது!
விறைத்த மனதில் எதுதான் ஏறும்..
ஏறினும் எங்கே வலிதெரிய லாகும்?

அறுவை யொன்று தொடர்ந்து நடந்தது;
அறுத்திடும் போதே ஆணவம் அறுந்தது!
*பவுத்திரம் அறுத்தே தையல் நடந்தது;
என்னைப் புதுக்கும் தையலும் நடந்ததோ?

'வேலை முடிந்தது' என்றவர் எழுந்தனர்;
'என்ன வேலை' என்றுயான் கேட்டேன்!
செய்த வேலைக்கு விளக்கம் தந்தனர்:
'இந்தச் சவ்வினுள் ஓர்துளை இருப்ப'தாய்

* பவுத்திரம் — FISTULA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தியை எடுத்துக் கத்தரித்துக் காட்டினர்!
காட்டிய இடத்தினி லோர்குழாய் தெரிந்தது;
பவுத்திரக் கட்டும் சேர்ந்தே தெரிந்தது! என்
புத்தியுள் எதுவோ உறைத்திட லானது!

## 5. முடிந்தது சிகிச்சை

புதியதோர் அர்த்தம் புரிவதாய்க் கண்டேன்!
சவ்வினுள் நானெனும் மமதையைக் கண்டேன்;
அறுவை யினூடே அகந்தையைக் கண்டேன்;
அறுந்தன அவையென அகத்தினுள் மகிழ்ந்தேன்!

'அப்பாடா, நான் பிழைத்துக் கொண்டேன்!'
என்றோர் ஆறுதல் கைவரப் பெற்றேன்!
புதிதாய்ப் பிறந்த குழந்தையின் நிலையினில்
கட்டிலில் கிடந்தே உலகத்தைப் பார்த்தேன்!

அந்த நிம்மதி வந்ததாற் போலும்,
அடுத்த நிமிடமே [1] அமுக்கம் குறைந்ததாய்
அழுத்தக் கருவியில் [2] வாசித்துப் பார்த்து
அடுத்தோர் 'சேலைன்' ஏற்றிட லாயினர்!

— வேறு —

நாடி பிடித்து வினாடி பார்த்தார்;
மானி பிடித்து [3] வெப்பம் பார்த்தார்;
பயந்து போனதாய் ஆரூடம் சொன்னார்;
பதற்றம் தணிந்து புன்னகை பூத்தேன்!

நரம்பைத் தேடியென் கரத்தில் அலைந்தார்;
நரம்பினைக் காணோம் என்று பகர்ந்தார்;
நரம்பு உள்ளே இருப்பதாய்க் கூறி
நகைச்சுவை நானும் உதிர்த்துப் பார்த்தேன்!

---

[1] அமுக்கம் – இரத்த அழுத்தம் (Blood Pressure)
[2] வாசித்துப் பார்த்து – reading எடுத்து
[3] வெப்பம் – உடற்சூடு (Temperature)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்திடத் தானே சிந்தனை பிறக்குது;
சிரித்திடத் தானே சித்தம் தெளியுது!
சிரித்திடத் தானே பிணியும் குறையுது;
சிரித்திட்ட போதே [1] சமநிலை வந்தது!

— வேறு —

சற்றே தள்ளியென் மனையாள் பார்த்திருக்க
மெல்லெனக் கால்களில் உணர்வு மீண்டது!
உணர்வு மீள்கையில் மனையாள் போயினள்;
உணவு சமைத்திட உறைவிடம் ஏகினள்!

மருத்துவ மனைக்கென் நண்பர்கள் சில்லோர்
வந்து போயினர்; அறிந்தவர் சிலரும்
வந்து பார்த்தே ஆறுதல் கூறினர்;
எனினும் என்மனம் பெருந்துயர் கொண்டது!

விறைப்பது நீங்கி வேதனை தெரிகையில்
பிரசவ வேதனை போலுமோர் உணர்வில்
குத்தி வலிக்கையில் துடித்துப் போனேன்;
பல்லைக் கடித்தே பழக்கிக் கொண்டேன்!

நண்பர் [2] கருணை யோகன் என்பால்
நாலையும் சொல்லி மாற்றிடப் பார்த்தார்;
எந்தன் சிந்தையை எங்கோ மாற்றிட
முயன்று தோற்றார்; வேதனை கொண்டார்!

மன்னுயிர் வேதனை தன்னுயிராய்க் கொள்ளும்
அன்பின் யோகனும் அகன்று போனார்;
அதற்கும் அப்பால் பொறுத்திடத் துணியா
அன்பு நெஞ்சும் விலகிப் போனது!

---

[1] சமநிலை – சகஜநிலை (normal)

[2] கருணை யோகன் – திரு. செ. யோகராசா, M. A.
(விரிவுரையாளர் – தமிழ்த் துறை, கிழக்குப் பல்கலைக் கழகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— வேறு —

நோய் வரும் போதிலும் வேதனை;
நோய் தீரும் போதிலும் வேதனை!
பாவம் சேர்கையில் பாதி வேதனை;
பாவம் அழிகையில் மீதி வேதனை!

தேவன் திருவுளம் என்னுள் நிறைந்ததோ...
தேர்வினில் நானும் தேர்ச்சி யுற்றேனோ?
பாவி மனிதனைக் கொன் றொழித்தேனோ...
பாச உணர்வினில் பற்றுதல் கொண்டேனோ?

விலங்கு மனிதனாய் இருந்த வேளையில்
விலங்குக் குணங்கள் என்னுளு மிருந்தன!
விலங்கு ஒடிந்து விடுதலை யானதும்
விடிவு எனக்குள் பிறப்பதை உணர்ந்தேன்!

## 6. துயில் கலைந்தது!

இரவு என்னுடன் எவருமிருந் திலர்;
இதனாற் றானோ சிந்தனை பிறந்தது!
வலியக் கேட்டே 'வலியம்' போட்டும்
இரவு தூக்கம் வருவதா யில்லை!

வேறு

ஊசிபோட்டும் தூக்கமின் றி வேதனை கொண்டேன்!
நாடிபிடித்து பார்ப்பதற்கும் நாதியில்லை! நானழைத்து
ஓடிவந்த சோதரர்கூட யோசனையென்று
சொல்லிப்போந்தார்!
நீரினைமாந்தி நிம்மதியின் றி நீள் துயில் கலைந்தேன்!

வேறு

இந்த மனைக்கென் செய்வது என்றே
இன்னு மின்னும் யோசனை பிறந்தது!
என்கை யிலொன்றும் இருப்பதா யில்லை;
எப்படிச் செய்வேன் என்பதும் அறியேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த வாழ்க்கையை நடத்திடத் தானும்
சிந்தை நொந்து தவிக்குமென் மனம்
இந்தக் கருமத்தை முடிப்ப தெங்ஙனம்
என்றே தன்னுள் ஏங்கித் தவித்தது!

## 7. வழி பிறந்தது!

பகலில் உறக்கம்; இரவில் விழிப்பு!
தனிமை என்னைத் தவித்திட வைத்தது!
தனிமை யில்தானே தத்துவம் பிறந்திடும்!
தத்துவம் பிறந்திட(த்) தனிமை மறந்தது!

சிந்தனை நெஞ்சில் பரந்து விரிந்தது!
முயன்றால் எதிலும் வெற்றியே என்று
உள்மனம் என்னுள் உரைத்திட லானது!
எண்ணித் துணிந்தேன்; எழுதத் துடித்தேன்!

புத்தொளி என்னுள் புகுந்து கொண்டது!
புதுவழி தன்னில் புணர்ந்திட லானது!
புதிது புதிதாய்(ப்) புத்தக மெழுதி,
புதியதோர் சேவை புரிந்திட முனைந்தது!

இறைவன் எனக்கு அளித்தநன் கொடையை
எண்ணி வியந்தேன்; இறும்பூ தெய்தினேன்!
கையினில் வெண்ணெய் இருக்கும் போதேன்
கைநீட்டி அலைந்திடல் வேண்டுமென் றெண்ணி
னேன்!

## 8. துணிவே துணை!

எழுத்து எனக்கும் இயல்பாய் வருமே!
எழுத்தால் எதையும் சாதிக்க லாகுமே!
என்ற தைரியம் நெஞ்சில் தைத்தது;
எனக்குள் இருந்த கவலை ஒழிந்தது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த முதலிருக்க ஏன்பயம் என்றே
எள்ளி நகைத்தது மூளை நரம்புகள்!
முதலிட(ப்) பணந்தான் முக்கிய மல்ல;
மூளை யிருந்தால் முழுவதும் வருமே!

சிறுமுதல் கொண்டோர் பெரும்பணி யாற்றின்
சிறுகச் சிறுகப் பெருநிதி சேருமே!
சிந்தனை நெஞ்சில் கிளர்ந்திட்ட போதே
தன்னம் பிக்கையில் துளிர்த்தது நெஞ்சு!

எந்தன் பணியினை எடுத்துச் சொன்னேன்;
நன்று நன்றெனப் பிறதரும் ஏற்றார்!
சீலோம் மனைக்கும் எடுத்துச் சொல்லி(ச்)
சிந்தை யிலாயிரம் கற்பனை விரித்தேன்!

## 9. காவியம் பிறந்தது !

கற்பனை கைக்குள் வந்து குவிந்தது;
களிப்புக் கொண்டேன் கவலை ஒழிந்தேன்!
கைமுதல் இதுவே யென்று துணிந்தேன்;
கைகட்டிச் சேவகம் செய்தது பேனை.

வந்து விழுந்தன வார்த்தைகள் நூறு
சிந்து பாடியே மகிழ்ந்தது நெஞ்சு
சந்து பொந்தெலாம் சுழன்று புகுந்து
அன்று படித்தவை அறிவில் வந்தன!

எதுகை மோனைகள் எதுவும் இன்றியே
கவிதை பிறந்திடல் கூடும் என்பதோ...
மரபை மீறியும் கவிதை பிறக்குமோ?
கவிதை பிறந்தது; கவலை மறைந்தது!

எவர்க்கும் புரிந்திட உரைத்திட வேண்டுமேல்
எதுகை மோனை எடுப்பதைத் தவிர்த்து
கவிதை ஒன்றினைப் புனைந்திடல் தப்போ?
கவிநயம் அங்கும் இருந்திடு மாமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கண மின்றியும் இலக்கிய மில்லை;
இலக்கிய மின்றியும் இலக்கண மில்லை!
கோழிக்குள் முட்டையா? முட்டைக்குள் கோழியா?
கோழிக்குள் முட்டைதான்! முட்டைக்குள் கோழிதான்!

## 10. படைப்பின் அதிசயம்

என்னே, இறைவன் படைப்பின் அதிசயம்!
என்னே, உலகின் தத்துவ விசாரம்!
ஒன்றினி லொன்று தங்கி யிருக்கவே
ஒவ்வொன் றினையும் முதல்வன் படைத்தான்!

நோயைத் தந்தேன் நொடித்திட வைக்கிறான்?
நோயும் இல்லையேல் நொடிப் பொழுதேனும்
தேவனை மறந்தே திரிவான் என்பதை
நோயுற்ற மனிதன் உணர்ந்திடத் தானோ?

நாத்திகம் பேசும் நாத்திகன் தானும்
நோயுற்ற போதே நினைக்கிறான் இறையை!
நேர்த்திக் கடன்பல வைக்கிறான் தன்னுள்!
நோயது தீர்ந்ததும் நேர்த்தியை மறப்பதும்

சிலமானிடர் வழக்கம்; சிந்தனை யில்லாச்
செவிடர்கள் இவரே! இறைவன் வார்த்தைகள்
இவர்கள் செவியினில் உறைப்பது மில்லை;
இவர்கள் திருந்திடப் போவது மில்லை!

மரண மென்பது மிறையின் கொடையே!
மானிட ராலதை மாற்றிடல் கூடுமோ?
மறுபிறப் பென்பது மரணம் நேர்ந்துதான்
வந்திட வேண்டும் என்பது விதியா?

மரணம் வருமுன் மனமது மாறின்
மறுபடி பிறப்பு வந்திடு மறிவீர்!
எனக்கது நேர்ந்தது; என்னுள் நிறைந்தது!
மறுபிறப் பன்றி யதன் மறுபேரேது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமியில் ஜனனமோ ஜூன் 22-ல்
சீலோமில் புதுஜென்மம் ஜூலை 22-ல்!
மானிடர் தமக்குப் பிறந்தநாள் ஒன்றே!
மாறிய எனக்கோ பூத்த திரண்டு!!

## 11. 'மூளைச் சலவை'

மூன்று தினங்கள் 'சீலோ'மில் எனக்கொரு
'மூளைச் சலவை' இனிதே நடந்தது;
மூன்று இரவுகள் மூன்று பகலுடன்
'மூளைச் சலவை' நடந்து முடிந்தது!

முடிவி னிலென் சோதரி சொன்னார்,
'மலங் கழிந்ததும் போகலா' மென்று!
மலங் கழிந்திட மனம் அழுதது;
மனத்தின் வெம்மை கண்ணில் கசிந்தது!

குமுறிக் குமுறி யழுதது மனது
குலுங்கிக் குலுங்கி துடித்தது தேகம்
கண்ணீ ராறாய்க் கண்கள் பெருக்கின
கவலை என்னுள் புகுந்து குடைந்தது!

பிள்ளைகள் வந்தென் பக்கலில் நின்று
என்னப்பா என்றே பதறித் துடித்தனர்;
ஒன்று மில்லை யென்றவர்க் குரைத்து
பித்துப் பிடித்துநா னழுவதைப் பார்த்து,

சோதரி யொருத்தி யோடோடி வந்தனள்;
போகும் போதேன் புலம்பல் என்றனள்!
போவதால் தானே புலம்பல் என்றேன்;
வேகும் எந்தன் வேதனை நெஞ்சில்!

தம்மை முற்றாய்ச் சேவையில் இணைத்து
என்னைக் கவர்ந்த என்னினிய சோதரரை
அன்னை இல்லத்தைப் பிரியுந் துயர்தனை
எண்ணிக் கவன்றே கண்ணீர் வடித்தேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. தீர்ந்தது கவலை!

அழுது தீர்த்ததும் அலம்பினேன் முகத்தை!
ஆனந்தக் கண்ணீர் வடித்ததாய்ச் சொல்லி
அழுதிடே னென்றென் பிள்ளைகட் குரைத்து
அன்புட னங்கிருந் தகன்றிட முயன்றேன்!

மூன்றாம் தேதி மீண்டும் வருமாறு
சங்கைக் குரிய சோதரி பணித்தார்!
இருபத்தி மூன்றல்ல; மூன்றே யென்று
மீண்டும் சோதரி அழுத்திச் சொன்னார்.

சொன்னது மென்மனம் துள்ளிக் குதித்தது
அன்னை இல்லத்திற் கடுத்துப் போவதை
எண்ணித் தானே உள்ளம் மகிழ்ந்தது
அன்பு மனையாளோ டகன்று வந்தேன்!

அன்னை இல்லமும் மனையாள் இல்லமும்
அண்மை யிலிருப்பதா லகமகிழ் வுற்றேன்!
எந்த வேளையு மங்கெமை வருமா(று)
இயம்பி நின்றனர்; இனித்த தென்மனம்!

## 13. மூன்றுநாள் மகிமை

மூன்றுநாள் விதியின் மகத்துவம் என்னே?
மூன்றாம்நாளே என்பணி தொடர தேவசித்தம்
சித்திக்க லானது; சிந்திக்கும் தோறும்
சேவகம் செய்திட வந்தன வார்த்தைகள்.

இப்படி முன்னாள் என்றுமே எனக்கு
எதுவுமே தோன்றி எழுதிடத் தோன்றில
இடையூ றெதுவும் நேர்ந்திடா வண்ணம்
இறைவன் துணையும் வாய்த்திட லானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெந்த புண்ணின் வேதனை கூட
வந்த சுவடின்றி மறைந்து போனது.
எழுத எழுத எழுத்தாணி நகர்ந்து
புதிய காவியம் படைத்திட லானது.

## 14. சேவையை நினைந்து வியந்தது நெஞ்சம்

அன்றும் தூக்கம் அணுக மறுத்தது
அன்னவர் சேவையை எண்ணி வியந்தது
அன்னையின் இல்லத்தை வளர்ப்பது பற்றியே
சிந்தனை யாவும் சிறகு விரித்தது.

மருந்தின் வேலை என்றனள் மனையாள்
மருந்து எதுவோ மனதுள் முகிழ்த்தது
மருத்துவ மனையின் மையம் நோக்கியே
மீண்டும் மீண்டும் சுழன்று நின்றது.

'சீலோம்' குளத்தில் மூழ்கி வந்ததால்
சீரும் சிறப்புமென் வாழ்வில் மலர்ந்தது
'சீலோம்' ஊழியர் சிறப்புற வாழவென்
சீரிய பணியது பயன்தர வேண்டுமே!

எதுவோ எந்தன் கழுத்தினுள் புகுந்து
பிடரியை அழுத்தி 'பொதுப்பணி செய்யத்
துணிந்திடு' என்றென் துணிவினைத் தூண்டி
பரிவுடன் என்னை அணைத்துக் கொண்டது!

எடுத்த பணியினை முடித்திடல் வேண்டியே
என்னைத் தனிமையில் விடுத்திட வெண்ணியோ
எவரும் வந்தெனைக் குழப்பிட முயன்றிலர்
எனது பணியதும் இனிதே தொடர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15. புதுவாழ்வு புலர்ந்தது

மறுநாள் மாலையில் நண்பர் வருகையில்
மயங்கி யந்நேரம் துயிலில் கிடந்தேன்
நேற்றைய விழிப்பே அன்றைய தூக்கம்
தூக்கம் கலைந்ததும் முறுவல் பூத்தது.

முன்னைய பிணியின் தொல்லைகள் மறைந்து
புதுவாழ்வு தன்னில் புகுந்ததாய்ச் சொன்னேன்;
புத்தகம் அடிப்பதைப் புதிராய் வைத்தேன்.
அற்புதம் தன்னை உரைத்திடல் எளிதோ?

அதற்கோர் காலம் வந்திட வேண்டும்;
அற்புதம் தானே விளங்கிட வேண்டும்!
அன்பின் மகிமையை உணர்ந்திட வேண்டும்!
அஹிம்சை வழியைப் புரிந்திட வேண்டும்!

## 16. மனமாற்றம்

என்மனம் இங்ஙனம் மாறிய தெங்ஙனம்?
தன்னைத் திருத்தின் தாரணி திருந்தும்
என்றநல் வாக்கினை ஏற்றுக் கொண்டதன்
பின்னணி யன்றோ மாற்றிட லானது!

மூன்றுக்கும் எனக்கும் எத்தனை தொடர்புகள்
மூன்றாம் நாளே என்பணி தொடர்ந்தேன்
மூன்றாம் தேதியே தன்மனை வருமாறென்
தாயார் பணித்தனள்! ஏனென நினைத்தேன்,

இன்னும் எனக்கொரு மூளைச் சலவை
செய்திட வேண்டும் என்பது தேவன்
சித்தம் போலும்; தொடர்வேன் யானும்!
எத்தனை தடவை என்னை அழைப்பினும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏணிப் படியில் ஏறுதல் போலுமென்
அன்னையைத் தேடி நானங்கு போவேன்!
என்னையே நம்பிய என் மனையாளும்
என்னை நம்பியே பெண்களாய் மூவரை

எனக்கு மக்களாய் அளித்து மகிழ்ந்தார்;
எனக்கு மட்டுமா, என்னைத் தூண்டிய
என்னருஞ் சோதரர் ஜேசு தாஸன்
தனக்கும் மூன்றே பெண்கள் இருப்பதும்

பெரும் பேறன்றோ பெற்றவர் நாங்கள்!
பேதையைப் பெற்றால் பெருந் துயரென்று
வேதனைப் படுவோர் கவலை ஒழிக!
நம்மைப் பார்த்துத் திருப்திப் படுக!

## 17. தேவ கட்டளை

என்தேவனின் கட்டளை தன்னை ஏற்பேன்
என் அன்னை வீட்டினில் வாழும் எவரும்
எங்கும் சென்றிடக் கூடா தென்றென்
உள்மனந் திறந்து உரைத்தே வந்தேன்!

தேவனை நினைத்தேன், தெளிந்தது என்மனம்
உன்னை நீயே திருத்திக் கொண்டபின்
தயக்கம் என்ன துணிந்திடு என்று
இந்தப் பணியினில் என்னை இயக்கும்

எந்தன் இறைவன் நொந்தவர் வாழ்வை
வெந்திட வொண்ணா காத்தருள் புரிவான்!
சிந்தனை தெளிந்திட புதுவழி பிறந்தது
அன்றென் மனத்திடை எழுந்தது காவியம்!

அள்ளிக் கொடுத்தால் அள்ளித் தருவான்
என்றஎன் தேவனின் வாக்குப் பலித்தது.
என்னுள் இருக்கும் சக்தியை இங்கு
எண்ணி வியந்தேன், என்பணி தொடர்ந்தேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சேலைன்' கொடுத்ததால் கொழுத்திடு வேனென
ஓர்சோதரி சொன்னதாய் செப்பினள் மனையாள்.
கொழுப்பது நானா? கொடுத்தவ னன்றோ
கொழுத்திட வேண்டும்! தேவநீதியதுதா னன்றோ?

## 18. கேளுங்கள் தரப்படும்

'கேளுங்கள் தரப்படும்' என்ற வாக்கியம்
கேட்ட விடத்தேயே நிறைவே றிற்று!
தட்டினேன் கதவை; திறந்தது கதவம்!
தேடிய போதே அனைத்தும் கிடைத்தது!

இயக்கிடும் போது எனக்கேன் பயமென
இயங்கிட லானேன், இனிஎந்த இயக்கமும்
என்பணி தன்னைத் தடுத்திடல் தகுமோ?
இயங்கு என்றே முழங்குது சங்கு!

— வேறு —

சங்கு என்றதும் கண்ண தாசனின்
நினைவு வந்து என்னைப் புரட்டுது
அர்த்த முள்ள இந்துமதந் தனில்
சங்கைப் பற்றியும் ஓர்கதை சொன்னான்.

— வேறு —

முதற்சங்கு அன்னைமுலையின் அமுத மென்றும்
இடைச்சங்கு கன்னிமடியின் சங்கம மென்றும்
கடைச்சங்கு கடைசிச் சடங்காய் சங்கமிப்பதாய்
மூன்று சங்கினை முதன்மைப் படுத்தினான்!

## 19. பணித்தனன், பணிந்தேன்!

அப்பத்தை எடுத்துப் பகிர்ந்தளித் தாரே!
அத்தனை பேர்க்கும் கொடுத்தது போக
கூடைகள் தன்னில் மீதத்தைச் சுமக்க
வைத்தவர் யேசு மேய்ப்பரா மன்றோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைக்குந் தோறும் ஊறும் என்றார்
கொடுக்குந் தோறும் சேரும் என்றார்
இல்லை யென்ற பல்லவி பாடுவோன்
இருப்பதும் இழந்து தவிப்பான் என்றார்!

தேவ வாக்குப் பொய்ப்பதே யில்லை!
அள்ளுந் தோறும் அளந்திடல் கூடும்
ஐந்து பத்தாய்ப் பெருகிடல் கூடும்
இப்பணி தன்னில் என்னை இணைத்தனன்!

பணித்தனன், பணிந்தேன்; பணிதொடர்வேன்! அவை
பல்கிப் பெருகிடும் என்பதும் அறிவேன்!
தேவனைப் போற்றும் எந்தன் உள்ளம்
தேவ நிந்தனை செய்ய மறுத்திடும்!

## 20. ஏழையின் சிரிப்பே இறைவனின் சித்தம்!

சட்டம் என்பதோர் இருட்டறை யாகும்;
கட்டளை ஆண்டவன் இட்டதே யாகும்!
கிட்டும் என்பணி நிறைவேறும் நாள்
கட்டளை யாவும் கனிந்தே தீரும்!

ஆகட்டும் சித்தம்; அவனுக்கே வெளிச்சம்!
என்செயல் இங்கு ஆவதொன் றில்லையே!
அன்னையர் பணிமனை ஊழியர் எவரும்
அன்னை இல்லத்தே அமர்ந்திடக் கடவர்!

ஏழையின் சிரிப்பினில் இறைவனைக் காண்பதும்
மலரும்உம் முகத்தில் மகிழ்ச்சியைக் காண்பதும்
கூடும் விரைவில் பயம்கொள்ள வேண்டாம்!
இறைவன் சித்தம் எங்ஙனம் பொய்க்கும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21. நோக்கம் நிறைவேறிற்று

**வேதனம் என்னும் ஊதியம் பெருகும்**
**ஊழியம் செய்யும் உத்தமர் அவர்க்கே!**
**ஆயிரம் பிரதிகள் விற்பதால் வரும்**
**பாதி ஊதியம் அவர்க்கே யாகுக!**

இட்டமுதல் ஒன்றே; அஃதென் எழுத்து.
அச்சினில் வடித்துத் தருவதென் பொறுப்பு
அத்தனை பேரின் வரவிலும் கணக்கு
வைத்திடும் எண்ணம் இனிதே மலர்க!

## 22. விடிவு இன்னமும் தொலைவினில் இல்லை

எழுக! துணிக! எழுந்து கருமம்புரிக!
எழுவானில் உதயம் தோன்றி விட்டது! இனி
எழுந்திடும்! எம் வாழ்வும் புலர்ந்திடும்!
ஒழிககவலை; ஓய்வின்றி ஊழியம் புரிகநிதமும்!

— வேறு —

விலங்கி விருந்தே மனிதன் பிறந்தான்
விலங்கு ஒடிந்தால் மனிதன் மிளிர்வான்
விலங்கு மனத்திடம் மானிடம் தோன்றா
விலங்கை விலக்கு விடுதலை பிறக்கும்!

விடிவு இன்னும் தொலைவில் இல்லை
விடிவை நோக்கியே நகருது உலகம்
விலங்கு மனமும் ஒருநாள் திரும்பும்
விடுதலை விரைவில் பிறந்தே தீரும்!

— வேறு —

மூன்றுநாள் விதியின் மகத்துவம் என்னே!
மூன்றாம்நாளே தேவ உயிர்ப்பும் நிகழ்ந்திட லானது!
மூன்றுநாள் உழைப்பிலென் மூளையுள் முகிழ்த்த
காவியம் இதனை ஏற்றிடு வீரே!

★ முற்றும் ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீ - லோ - ம்
## SI - LO' - AM

சீலோமில் தானே சேவையைக் கண்டேன்
சீலோமில் தானே சிந்திக்க லானேன்
சீலோமில் நானோர் புனர்ஜென்மம் பெற்றேன்
சீலோமின் சேவையை யார்தான் அறியார்?

எனக்குள்ளு மொரு மாபெரும் சக்தி
இருப்பதைக்கூட சீலோம் தானே
எனக்கே சொன்னது;
என்னைத் திருத்தி ஏற்றம் தந்தது!
என்னுள்ளிருந்த தாழ்வுச் சிக்கலை
எள்ளிநகைத்து எடுத்தெறிவித்து
தன்னம்பிக்கையை — தைரியந்தன்னை
என்னுள் திணித்த பெருமை யெல்லாம்
அன்னை போலும் என்னைப் பார்த்த
**கருணை** இல்லம் இதையே சேரும்!

என்னை மட்டுமே கவனித்திருந்தால்
இத்தனை சிறப்புப் பெற்றிருக்காது;
தன்னை நாடி வருகின்ற பேரை
தன்னலம் கருதாச் சேவையினாலே
பொன்னை உருக்கி வார்த்தது போலே
தன்னைத் தானே புடம்போட்டிருப்பது
என்னை மட்டும் சும்மா விடுமா?
என்னுள் எதையோ உறைத்திட வைத்து...
என்னுள் இதனை எழுதவைத்து...
எனக்கும் ஏற்றம் தந்தது 'சீலோம்!'

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி!

நல்லது செய்ய நினைத்திடும் யாருமிந்(த)
நல்ல பணிக்கு அள்ளித் தருவீர்!
நல்லன செய்யின் நலமே விளையும்!
நன்றி யனைவர்க்கும் உரித்தே யாகுக!

**வணக்கம்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1993 ஜனவரி முதல்...

கீழ்வான் பரப்பில்
மீளவோர் உதயம்!

## "தாரகை"

கலை இலக்கிய காலாண்டிதழ்

தொடர்புகள்:

கணா. மகேஸ்வரன்,
ஆசிரியர், "தாரகை"
21, சுப்பையா லேன்,
மட்டக்களப்பு.

---

எமது அடுத்த வெளியீடு...

## 'அக்கினிக் குளியல்'

- சிறுகதைத் தொகுதி -

---

1993 பெப்ரவரியில்
வெள்ளிவிழா ஆண்டை நோக்கி...

## "தொண்டன்"

கிறீஸ்தவ இலக்கியத் திங்களிதழ்

தொடர்புகள்:

ஆசிரியர், "தொண்டன்"
சமூகத் தொடர்புகள் நிலையம்,
தபால் பெட்டி எண் - 44,
மட்டக்களப்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்நூலாசிரியர் கண. மகேஸ்வரன் சொந்தப் பெயரிலும், வீக்கேயெம், மணிமணாளன் போன்ற புனை பெயர் களிலும் எழுதிவருபவர்.

ஈழத்து இலக்கிய உலகில் வலம்வந்த "தாரகை" என்னும் சஞ்சிகையின் ஆசிரியர்.

மாணவப் பருவத்தில் 'நவரசம்', 'கமலம்' போன்ற கையெழுத்துச் சஞ்சிகைகளின் ஆசிரியராக விளங்கியவர். மட்டக்களப்பு தொழில் திணைக்களத்தில் எழுதுவினைஞராகக் கடமைபுரியும் திருமணமான இவருக்கு மூன்று குழந்தைகள் உளர்.

கவிதை, கட்டுரை, சிறுகதை, குறுநாவல், மெல்லிசைப் பாடல்கள் என்று ஆக்க இலக்கியத்துறையில் அகலக் கால் பதித்துள்ள இவரது தோற்றத்தில் - பேச்சில் உள்ள மென்மையும் நளினமும் எழுத்திலும் உண்டு.

ஆரம்பகாலத்தில் 'சிரித்திரன்' பணிமனையில் கடமைபுரிந்த இவர் தற்போது 'தொண்டன்' ஆசிரியர் குழுவிலும் பணியாற்றுகிறார்.

குறைவாகவே எழுதினாலும் நிறைவாக செய்ய விரும்பும் துடிப்புள்ள இளையவர் - பழகுவதற்கு இனியவர்; பண்பாளர்.

"மலரும் வாழ்வு" நூலுருவில் வரும் இவரது முதல் முயற்சி.

— எம். வி.

தாரகை வெளியீடு

சென். ஜோசப் கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org